25th March 1959]

THE HON. SRI P. KAKKAN : அதற்கென்று அமைக்கப்பட்ட கமிட்டி பரிசீலிப்பதற்காக 55 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்னும் இன்லாண்டு வாடர் டிரான்ஸ்போர்ட் கமிட்டி இந்த வருஷத்தில் ஒரு முடிவும் எடுக்கவில்லை. அது இன்னும் இந்த விஷயத்தில் முடிவு எடுக்கவில்லை. இன்னும் பரிசீலனையில் இருக்கிறது. கவர்ன்மெண்ட் அந்தக் கமிட்டி ரிப்போர்ட்டைக் கேட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, may I know from the Hon. Minister whether our Government have submitted any proposals and if so, what the proposals are?

THE HON. SRI P. KAKKAN : I want notice, Sir.

SRI A. VEDARATHNAM : இன்லாண்டு வாடர் டிரான்ஸ்போர்ட் கமிட்டி அவர்களுடைய ரிப்போர்ட்டை மத்திய அரசாங்கத்திற்கு சமர்ப்பித்து விட்டார்களா ? அந்த ரிப்போர்ட்டுகள் நமக்குக் கிடைக்குமா ? அவ்வாறு நாம் கோரித்தான் பெற்றுக்கொள்ள வேண்டுமா ? அந்த ரிப்போர்டு சட்டசபை முன்பு வைக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : The Inland Water Transport Committee in its interim report has made some observations on the provision of technical facilities.

The report is under the examination of Government in consultation with the Chief Engineer.

Assignment of lands in Nilakkottai taluk

* 997 *Q.*—**SRI K. B. S MANI (on behalf of SRIMATHI A. S. PONNAMMAL)**: கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நிலக்கோட்டை தாலூகா, நாச்சிகுளம் கிராமம்—காட்டுப்பட்டியின் அருகில் பெரியார் (Main Channel)-லின் இருபுறங்களிலும் தரிசாக இருக்கின்ற சுமார் 125 ஏக்கர் நிலங்களை ஏழை விவசாயிகள் விவசாயம் செய்ய அரசாங்கம் அனுமதிக்க உத்தேசம் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no such proposal.

SRI K. B. S. MANI : தரிசாக இருக்கக் கூடிய நிலங்களை நாட்டிலே உணவுப் பற்றாக்குறை இருக்கும்பொழுது, அதிகமான விளைச்சலை ஏற்படுத்தவேண்டுமென்று நினைக்கும்போது இந்த மாதிரி 125 ஏக்கர் நிலங்களை ஏன் ஏழை ஹரிஜன மக்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யக்கூடாது ? அதில் ஏதாவது தடைகள் இருந்தால் அதை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நிலங்கள் பெரியார் மெயின் சானல் புறம்போக்கு நிலங்கள் ஆகையால் இந்த சானல் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்ய முடியாது.

SRI N. R. THIAGARAJAN : இந்த நிலம் ஏற்கெனவே நிலம் இல்லாத தியாகிகளுக்கு ஜாரி செய்ததை ரெவின்யூ போர்டு ரத்து செய்துவிட்டது. நான் அந்த நிலத்தைப் போய்ப் பார்த்தேன். இது பெரியார் திட்டத்திற்கு விரோதமாக இல்லை. ஆகையால் அரசாங்கம் இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து ஏழைகளுக்கு ஜாரி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி பாதிக்காது என்று என்ஜினியர் சொன்னால் நன்றாக இருக்கும். ஆனால் கனம் அங்கத்தினர் என்ஜினியர் என்ற ஹோதாவில் அவ்வாறுசொல்கிறார்களா?